(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 22 PTM 310**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2023**

**எம்.ஏ.-தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**மூன்றாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## காப்பியங்கள்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. ‘கனவு கண்டேன் கடிதீங்கு உறுமென’ – கூறியவர் யார்?
   (அ) மாடலன் (ஆ) கோவலன் (இ) கண்ணகி (ஈ) மாதரி
2. ‘அணிமலர் பூங்கொம்பு’ எனச் சாத்தனார் யாரைச் சுட்டுகின்றார்?
   (அ) ஆதிரை (ஆ) மாதவி (இ) மணிமேகலை (ஈ) ஆபுத்திரன்
3. ‘அடியார் வேண்டிய மெய்ப்பணி செய்யத் தீதில் குடிப்பிறந்தார்’ – யார்?
   (அ) திருவெண்காட்டு நங்கை (ஆ) காரைக்காலம்மையார்
   (இ) வந்தி (ஈ) சந்தனநங்கை
4. ‘வானியங்கு தேரினான் மகன் யார்?’
   (அ) சுக்ரீவன் (ஆ) இராமன் (இ) இலக்குவன் (ஈ) அனுமன்
5. பின்வருபவர்களுள் நளன் தன் நாட்டை யாரிடம் கொடுத்தான்?
   (அ) புட்கரன் (ஆ) தமயந்தி (இ) மக்கள் (ஈ) அண்டை நாட்டு அரசன்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. கோவலனைப் பற்றிக் காவலர் கூறியது யாது?
7. துறவியர்கள் கடைப்பிடிக்கத்தக்க சீலங்கள் யாவை?
8. வத்தவன் எங்ஙனம் பந்தடியைக் கண்டான்?
9. இராமன் சுக்ரீவனுக்குத் துணையாக வந்தான் என்பதைத் தாரை எங்ஙனம் உரைத்தாள்?
10. வந்தி கூலிக்கு ஆள் கிடைக்காமல் எங்ஙனம் வருந்தினாள்?

**பகுதி – ஆ** (5 x 3 = 15)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) முதுவேனிற் காலத்து இறுதியை இளங்கோவடிகள் எங்ஙனம் சித்திரித்துள்ளார்?

(அல்லது)

ஆ) மாதரி கண்ட தீய நிமித்தங்கள் யாவை?

**(த.பி.பா.)**

12. அ) ஆபுத்திரன் அடைந்த துயரத்தை எழுதுக.

(அல்லது)

ஆ) விசயைக்குத் துறவியர் அளித்த உணவுகள் யாவை?

13. அ) பரஞ்சோதி சிறுத்தொண்டர் எனப் பெயர் பெற்றமைக்கான காரணத்தைக் கூறுக.

(அல்லது)

ஆ) உதயணன் சிங்காதனத்தில் வீற்றிருந்த நிலையைக் கூறுக.

14. அ) சுக்ரீவனுடன் போரிட வேண்டாம் எனத் தடுத்த தாரைக்கு வாலி கூறிய மறுமொழி யாது?

(அல்லது)

ஆ) அம்பு பட்ட வாலி நிலத்தில் சாய்ந்ததைக் கம்பர் எங்ஙனம் விவரித்துள்ளார்?

15. அ) சூதாடத் துணிந்த நளனுக்கு அமைச்சர் கூறிய அறிவுரை யாது?

(அல்லது)

ஆ) 'கூலிக்கு ஆள் வேண்டுமோ' எனக் கேட்டு வந்த சிவபெருமானின் தோற்றத்தைக் கூறுக.

பகுதி – இ (5 x 5 = 25)

**பின்வரும் வினாக்களில் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விரிவாக விடையளிக்க.** (K4 & K5)

16. அ) கண்ணகி வழக்குரைத்த பாங்கினை விவரிக்க.

(அல்லது)

ஆ) சாலினி கண்ணகியைப் புகழ்ந்துரைத்த திறம் குறித்து விவரிக்க.

17. அ) சீவகனை நோக்கி அவன் தேவியர் அரற்றியழுத தன்மையினை விவரிக்க.

(அல்லது)

ஆ) மணிமேகலை பாத்திரம் பெற்றதைச் சீத்தலைச் சாத்தனார் புலப்படுத்து மாற்றை விளக்குக.

18. அ) சிறுத்தொண்டரின் பக்தித் திறத்தை நும் பாடப்பகுதி கொண்டு விவரித்தெழுதுக.

(அல்லது)

ஆ) மணம்படு காதையில் இடம் பெறும் செய்திகளை விளக்கியுரைக்க.

19. அ) மறைந்திருந்து தம்மீது அம்பெய்திய இராமனை நோக்கி வாலி கூறியவை குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) 'மறைந்து நின்று எய்துவது முறையோ' எனக் கேட்ட வாலிக்கு இலக்குவன் உரைத்த மறுமொழியை விவரிக்க.

20. அ) பிறந்தகம் அடைந்த தமயந்தியைக் கண்டோரின் நிலையை விவரித்தெழுதுக.

(அல்லது)

ஆ) சிவபெருமான் பிரம்படி பட்டமையை நும் பாடப்பகுதி கொண்டு புலப்படுத்துக.



******